**செ. கு. எண்:18** **நாள்: 26.01.2021**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

வாழ்த்துச்செய்தி – 26.1.2021

தேனினும் இனிமையான தனது குரலால் தமிழ்நாட்டு மக்களை மட்டுமன்றி இந்திய மக்களையும் கவர்ந்த பிரபல திரைப்பட பாடகரும், திரைப்பட நடிகரும், எஸ்.பி.பி என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட மறைந்த பாடகர் **திரு. எஸ்.பி பாலசுப்பிரமணியன்** அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக, அவருக்கு மத்திய அரசின் உயரிய விருதான **பத்ம விபூஷன் விருது** அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மகளிர் கூடைப்பந்தாட்ட அணியின் தலைவர் **அனிதா பால்துரை** அவர்களின் விளையாட்டு திறனை அங்கீகரித்து, அவருக்கு மத்திய அரசு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த வில்லிசை வேந்தர் **திரு. சுப்பு ஆறுமுகம்** அவர்கள் வில்லுப் பாட்டு கலைக்கு ஆற்றிய சேவையை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசின் **பத்மஸ்ரீ விருது** அறிவிக்கப்பட்டுள்ளது.

புகழ் பெற்ற தமிழ் அறிஞர், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் திருக்குறளையும், சங்க இலக்கியங்களையும் இனிய தமிழில் நகைச்சுவை கலந்து விளக்கி, தமிழ் மொழிக்கு அரும் பணி ஆற்றி வரும் பேராசிரியர் **திரு. சாலமன் பாப்பையா** அவர்களுக்கு மத்திய அரசு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

தொழில் செய்வதற்கு வயது ஒரு தடையல்ல என்பதற்கு சான்றாக, வயது முதிர்ந்த போதிலும் விவசாயம் செய்யும் கோயம்புத்தூரைச் சேர்ந்த **திருமதி பாப்பம்மாள்** அவர்களுக்கு மத்திய அரசு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

புகழ் பெற்ற கர்நாடக இடைப்பாடகி **பாம்பே ஜெயஸ்ரீ ராம்நாத் அவர்களின்** இசைச் சேவையை அங்கீகரிக்கும் விதமாக அவர்களுக்கு மத்திய அரசு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

ஓவிய கலைத்துறையில் சிறந்து விளங்கிய மறைந்த **ஓவியர் திரு. கே.சி சிவசங்கர்** அவர்களை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

கரூரைச் சேர்ந்த **திரு. மாராச்சி சுப்புராமன்** அவர்களின் சமூக சேவையினை பாராட்டி அவருக்கு மத்திய அரசு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

மருத்துவத் துறையில், சிறப்பாக பணியாற்றி, ஏழை, எளிய மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் மருத்துவம் அளித்த மறைந்த **டாக்டர் திருவேங்கடம் வீரராகவன்** அவர்களின் சேவையினை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு அவருக்கு **பத்மஸ்ரீ விருது** வழங்கி அறிவித்துள்ளது.

தஞ்சாவூரைச் சேர்ந்த தொழிலதிபர் **திரு. ஸ்ரீதர் வேம்பு** அட்வெண்ட்நெட் என்ற மென்பொருள் நிறுவனத்தை நடத்தி வருகிறார். இவருடைய தொழில் வளர்ச்சியினை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

சாந்தி கியர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும், சாந்தி சமூக அறக்கட்டளையின் நிறுவனருமான மறைந்த **திரு. சுப்பிரமணியன்** அவர்களின் சமூக சேவையினை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு அவருக்கு **பத்மஸ்ரீ விருது** அறிவித்துள்ளது.

இந்திய திருநாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு எதிரிகளின் தாக்குதலில் வீரமரணம் அடைந்த ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த **ஹவில்தார் திரு. பழனி** அவர்களுக்கு மத்திய அரசின் விருதான **வீர் சக்ரா விருது** அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பத்ம விபூஷன், பத்மஸ்ரீ மற்றும் வீர் சக்ரா விருதினை பெற்ற இவர்கள் அனைவருக்கும் தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**